**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRIC MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
MADATHUKULAM

| | | |
|---|---|---|
| Calender | : | CC 332/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosectuion (Pw 1 ) |
| | : | |
| Name | : | Kannimuthu |
| Father's Name | : | Chinna Kaliayappan |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 61 |

Solemnly affirmed in accordance with he provision of act X of 1873

of the 01st day of March 2021

நாள் **CC 332/2019** அ.சா **1**
பெயர் கன்னிமுத்து த/பெ. சின்ன காளியப்பன்

**(**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு மு.வி**)**

நான் பாப்பான்குளத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி மற்றும் கலைசெல்வி , கருப்பசாமி, செல்வராஜ் ஆகியோர்களை தெரியும் . ஆணைத்தோட்டத்தில் எனக்கு க .ச.எண்.367 ல் காலை 524 ல் 1 1/2 ஏக்கர் பூமி உள்ளது. அதில் கண்ணன் பூமி மேல்பக்கம் உள்ளது . அதில் இருவருக்கும் பொதுவாக நடைபாதை உள்ளது . அந்த நடைபாதை 5 நபர்களுக்கு பொதுவானது ஆகும் . 11.12.2016 அன்று காலை 10 .30 மணியளவில் என்னை தடத்தில் வரக்கூடாது கண்டாரோழி என்று கெட்ட வார்த்தியால் என்னை கலைசெல்வி திட்டினார் . நான் தோட்டத்திற்கு சென்று விட்டேன் . மாலை 03 மணிக்கு எங்களது தோட்டத்து பாதையில் கண்ணன் , கலைச்செல்வி, கருப்புசாமி , செல்வராஜ் ஆகிய 4 பேரும் வந்தார்கள். நானும், எனது மனைவி சரஸ்வதியும் மக்காசோன வயலில் வேலை செய்து கொண்டிருந்தோம். எதிரிகள் 4 பேரும் வந்த உடன் கண்டாரோழி என்று கெட்ட வார்த்தையல் திட்டி , எதிரிகள் 4 பேரும் கையில் தடியுடன் வந்து 4 பேரும் என்னை வலது புற மண்டையில் அடித்து காயம் ஏற்பட்டது , 9 தையல் போடப்பட்டது , மேற்படி எதிரிகள் 4 பேரும் எனது மனைவி சரஸ்வதியை தடியில் நடு மண்டையில் அடித்து மண்டை பிளந்து விட்டது, பின்பு எனது மனைவியின் வயிற்றில் எட்டி உதைத்தனர் . எங்கள் இருவரையும் 4 எதிரிகளும் இப்போது தப்பித்துக் கொண்டாய் கொல்லாமல் விட மாட்டோம் என்று மிரட்டினார்கள் . பின்னர் எனது மகன்கள் சரவணக்குமார் , சண்முகசுந்தரம் வந்தார்கள் நான் மயக்கம் போட்டு விழுந்தேன் மயிலாத்தாள் , காளிமுத்து ஆகியோர் என்னையும் , எனது மனைவியையும் உடுமலை அரசு மருத்துவமனைக்க அழைத்துச் சென்றார்கள் . எனக்கு உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்தார்கள் எனது மனைவியை கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். குமரலிங்கம் போலீசார் வந்து என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் . என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அது அதசாஆ 1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை